LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

U.G. DEGREE EXAMINATION – **LANGUAGES**

FIRST SEMESTER – **NOVEMBER 2023**

UTL 1102 – TAMIL – I (VOC)

Date: 15-11-2023 Dept. No. Max. : 100 Marks

Time: 09:00 AM - 12:00 NOON

பகுதி – அ *(10 x 2 = 20 மதிப்பெண்கள்)*

விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

01. அம்பலத்துள் உடையார் யார்? கடையூழி வரும் காலத்தில் வாசிக்க அவர் தேர்ந்து கொண்ட நூல் எது?
02. "வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்" – இடம் சுட்டுக.
03. "நாட்டின் நெறி தவறி நடந்துவிடாதே
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்துவிடாதே" – பொருள் தருக.
04. "வாத்தியார் வீட்டுப் பிள்ளை நான்
வயக்காட்டுத் தும்பைப் பூ நீ"- தெளிவுபடுத்துக.
05. கல்லாதான் கற்ற கவி எதனைப் போன்றது என ஔவையார் கூறுகிறார்?
06. மாயூரம் வேதநாயகர் எழுதிய நூல்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
07. மு. மேத்தாவின் பரிசுபெற்ற நூற்களைக் குறிப்பிடுக.
08. குறவஞ்சிக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?
09. இரை, இறை – பொருள் தருக.
10. பிழையின்றி சேர்த்து எழுதுக. அ) ஓடா + குதிரை ஆ) நிலா + சோறு

பகுதி – ஆ *(5 x 7 = 35 மதிப்பெண்கள்)*

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப் பக்க அளவில் விடையளிக்க.

11. பேராசிரியர் பெ. சுந்தரனார் தமிழ்மொழியின் பெருமைகளாகக் கூறுவனவற்றை எழுதுக.
12. 'தூர்' என்னும் கவிதை வழியாக நா. முத்துக்குமார் குறிப்பிடும் சிந்தனைகளை எழுதுக.
13. ஔவையாரின் மூதுரையில் இடம்பெறும் அறச்சிந்தனைகளை விளக்கியுரைக்க.
14. செண்பகராமன் பள்ளுவில் சுட்டப்பெறும் நாட்டுவளத்தை எடுத்துரைக்க.
15. தற்காலக் கவிஞர்களுள் பாரதியார், பாரதிதாசன் குறித்து கட்டுரைக்க.
16. ஐக்கூ கவிதை குறித்து விளக்குக.
17. தொடர்ப் பிழைகளைத் திருத்தி எழுதுக.
அ) முக்கியமான ஒரு அறிவிப்பு
ஆ) மாணவன் தம் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபட வேண்டும்.
இ) அன்புக்கொரு அக்காவும் பண்புக்கோர் தங்கையும் எனக்குண்டு.
ஈ) தாய்மார்கள் தன் குழந்தைகளைக் கவனமாக வளர்க்க வேண்டும்.
உ) கேள்விகள் எதிர்பார்த்ததாய் இருந்தது
ஊ) செய்திகள் தவறானது. அதை நம்பக்கூடாது.
எ) OK. அடுத்த கொஸ்டினைப் பார்க்கலாமா?

பகுதி – இ *(3 x 15 = 45 மதிப்பெண்கள்)*

மூன்று பக்க அளவில் விடையளிக்க.

18. பாரத தேசத்தின் பெருமைகளை பாரதியார் எடுத்துரைக்கும் பாங்கினை விவரிக்க.

(அல்லது)

தோழியின் நினைவுகளாகத் தமிழச்சி தங்கபாண்டியன் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

19. சிற்றிலக்கியங்கள் குறித்து கட்டுரை ஒன்று வரைக.

(அல்லது)

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

20. 'புது வாத்தியார்' சிறுகதையின் பாத்திரப் படைப்புகள் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

'சிற்பியின் நரகம்' என்னும் சிறுகதையினைத் திறனாய்வு செய்க.

&&&&&&&&&&